(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 5(4).] **பாராளுமன்றம்**

## 5 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2017 சனவரி 20 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2017 பெப்ரவரி 21, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

528/ '16

கௌரவ புத்திக பத்திரண,— ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டளவில் இலங்கையில் மிளகு பயிர்செய்யப்பட்ட நிலப்பரப்பு எவ்வளவு;

(ii) 2010 தொடக்கம் 2015 வரையான ஐந்து வருட காலப்பகுதியில் மிளகு உற்பத்தி ஆண்டுவாரியாக வெவ்வேறாக எத்தனை கிலோகிறாம்;

(iii) அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து நேரடியாக மிளகைக் கொள்வனவு செய்கின்றதா;

(iv) ஆமெனில், கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட மிளகின் அளவு ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மிளகு உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

920/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 முதல் 2015 வரையிலான காலத்தினுள் இலங்கை துறைமுக அதிகாரசபை பழைய இரும்பு விற்பனைக்காக நடவடிக்கை மேற்கொண்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு கேள்விப்பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(iii) 2011 முதல் 2015 வரை ஒவ்வொரு வருடத்திலும் விற்பனை செய்யப்பட்ட இரும்பின் அளவுகளும் விலைகளும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி இரும்பினை கொள்வனவு செய்த ஆட்கள் மற்றும் ஒவ்வொரு ஆளினாலும் கொள்வனவு செய்யப்பட்ட இரும்பின் அளவு வெவ்வேறாக யாவையென்பதையும்;

(v) சந்தை விலையைப் பார்க்கிலும் குறைந்த விலைக்கு விற்கப்பட்டமை காரணமாக இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

961/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வயம்ப பல்கலைக்கழகத்தில் தற்போது இயங்கிவரும் பீடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அங்கு இயங்கிவரும் திணைக்களங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு பீடத்திலும் மற்றும் திணைக்களத்திலும் இருக்கவேண்டிய நிரந்தர விரிவுரையாளர் குழாம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) நிரந்தர விரிவுரையாளர் குழாமில் வெற்றிடங்கள் நிலவுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பீடத்தின்படியும் திணைக்களத்தின்படியும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1001/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் கமநல வங்கி எனும் பெயரிலான வங்கியொன்று இயங்கி வருகின்றது என்பதையும்;

(ii) மேற்படி வங்கி 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டம் அல்லது 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படவில்லை என்பதையும்;

(iii) பதிவு செய்யாது மக்களிடமிருந்து வைப்புக்களை கையேற்பது சட்டவிரோதமானது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) கமநல வங்கியைப் பதிவு செய்யாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(ii) மேற்படி வங்கியைப் பதிவு செய்ய அல்லது இரத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1036/ '16

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் கம்பஹா மாவட்டம் உள்ளடங்குகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(iii) கம்பஹா மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2016 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் "கொழும்பு பெரும்பாக நகரப் போக்குவரத்து மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக" ஒதுக்கப்பட்ட ரூபா. 714 மில்லியன் தொகையைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள வெளிச்சுற்றுவட்ட மற்றும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்கான புகுமுக வழிகளை விஸ்தரிக்கும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள புகையிரத வீதிகள் மற்றும் பேருந்து முனையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள கருத்திட்டங்கள் காரணமாக பொது மக்களின் பயண நேரம் ஏற்கெனவே இருந்ததை விட எவ்வளவு குறைவடைந்துள்ளது என்பதையும்;

(v) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவில்லையெனில், அதற்கென ஒதுக்கப்பட்ட பணத்தொகைக்கு என்ன நடைபெற்றதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1061/ '16

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த காலப்பகுதியில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக அங்கவீனர்களான பலர் உள்ளனர் என்பதையும்;

(ii) இவர்களில் குறிப்பிடத்தக்கதொரு தொகையினரின் முள்ளந்தண்டுக்கு ஏற்பட்டுள்ள சேதத்தின் காரணமாக இடுபுக்குக் கீழ் பகுதி செயலிழந்துள்ளதென்பதையும்;

(iii) இடம்பெயர்ந்துள்ள இவர்களில் பெரும்பாலானவர்கள் தற்போது மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளதோடு இன்னும் சிலர் இதுவரை குடியமர்த்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினாலும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் வீடுகள் மற்றும் மலசலகூடங்கள் நிர்மாணித்துக் கொடுக்கப்படும்போது மேற்கூறப்பட்ட அங்கவீனமுற்ற நபர்களின் வீடுகளுக்கு பிரவேசித்தல் மற்றும் மலசல கூடங்களைப் பயன்படுத்துதல் ஆகிய வசதிகள் தொடர்பாக கவனஞ் செலுத்தி அவற்றுக்குப் பொருத்தமான விதத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளையும் மலசலகூடங்களையும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எத்தனை சதவீதத்தில் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1096/ ’16

கௌரவ அசோக பிரியந்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் நடைபெற்ற க.பொ.த (உயர்தர) பரீட்சைக்கு இம்மாவட்டத்திற்கு புறம்பான வெளிமாவட்ட மாணவர்கள் தோற்றிய பல சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(ii) இந்நிலைமையின் காரணமாக குறைந்த வசதிகளின் கீழ் க.பொ.த (உயர்தர) பரீட்சைக்கு தோற்றி பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்க்கும் புத்தளம் மாவட்ட மாணவர்களுக்கு பலத்த அநீதி ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளி மாவட்ட மாணவர்களின் கருத்திட்ட அறிக்கைகளை போலியான முறையில் அங்கீகரித்து புத்தளம் மாவட்டத்திலிருந்து மேற்படி பரீட்சைக்கு தோற்றுவதற்கு துணைபுரிந்த பாடசாலை அதிபர்களின் பெயர் மற்றும் இவர்கள் கடமையாற்றும் பாடசாலைகள் யாவை என்பதையும்;

(ii) இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளை செய்த மற்றும் இந்த சட்டவிரோத செயற்பாடுகளுக்கு துணைபுரிந்த பாடசாலை அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு எதிராக ஏதேனும் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1105/ ’16

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வட மாகாண சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்குரிய மடு, ஒட்டுசுட்டான், கண்டாவளை மற்றும் மருதங்கேணி ஆகிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்களுக்கு ஏற்புடையதாக பிரதேச சபைகள் தாபிக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) உத்தேச உள்ளூராட்சி சபைகளை தொகுதி முறைக்கமைய அமைப்பதற்கு ஏற்புடையதாக, எல்லை நிர்ணய குழுவினால் மேற்படி பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு ஏற்புடையதாக புதிய பிரதேச சபைகளை தாபிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1124/ ’16

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் ஊவா மாகாணத்தில் தனியார் பேருந்துகளுக்காக வீதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், அவ்விதமாக வீதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வீதிகள் யாவை;

(iii) அவ்விதமாக வீதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஆட்களின் பெயர்கள் யாவை;

(iv) அதற்காக கடைப்பிடித்த முறையியல்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1129/ '16

கௌரவ எஸ்.எம் மரிக்கார்,— மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016.09.22 ஆம் திகதியன்று மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் கொட்டிக்காவத்த, முல்லேரியா பிரதேச சபையின் செயலாளர் ஆரம்ப விசாரணையோ நியாயமான காரணங்களோ இன்றி இடமாற்றம் செய்யப்பட்டார் என்பதையும்;

(ii) ஆரம்ப விசாரணையின்றி இடமாற்றங்கள் வழங்க வேண்டாமென்றும், மேற்படி இடமாற்றம் இரத்துச் செய்யப்பட வேண்டுமென்றும் மேல் மாகாண ஆளுநரினால் அன்றைய தினமே அறிவிக்கப்பட்டதென்பதையும்;

(iii) மேல் மாகாண ஆளுநரினால் அவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும், மேல் மாகாண செயலாளரோ அல்லது உள்ளூராட்சி ஆணையாளரோ அதனை நடைமுறைப்படுத்த தவறிவிட்டார்கள் என்பதையும்;

(iv) இந்த நிலையில், அதற்கு சில தினங்களுக்கு பின்னர் உள்ளூராட்சி ஆணையாளர் பிரதேச செயலாளருக்கு அழுத்தம் பிரயோகித்து சுயவிருப்பத்துடன் இடமாற்றத்தை பெறுவதாக விருப்பத்தை பெற்றுள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) உள்ளூராட்சி நிறுவனமொன்றின் பதவிக் காலம் முடிந்துள்ள நிலையில் மேற்படி உள்ளூராட்சி நிறுவனத்தின் செயலாளரை ஆரம்ப விசாரணை எதுவுமின்றி இடமாற்றம் செய்ய முடியுமா என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட (அ)(iii) இல் சொல்லப்பட்டுள்ள தவறிழைப்பு நடைபெறவில்லை எனில், அதனை நிரூபிக்க முடியுமா என்பதையும்;

(iii) இச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1141/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) ஏறாவூர்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவின் மூலம் உள்ளடக்கப்படும் மொத்த நிலப் பரப்பு எவ்வளவு என்பதையும்;

(iv) அதிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) அக்கிராம அலுவலர் பிரிவுகளின் உத்தியோகபூர்வ இலக்கங்களும் பெயர்களும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அப்பிரதேச செயலாளர் பிரிவைத் தாபிக்கும்போது உத்தியோக பூர்வமாக எல்லைகளை நிர்ணயித்தல் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அப்பிரதேச செயலகத்திற்குரிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஏதேனும் பிரிவின்/பிரிவுகளின் நிருவாக நடவடிக்கைகள் அல்லது தொழிற்பாடுகள் வேறு பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள், உத்தியோகபூர்வ இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1165/ '16

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் ஒருவரான திரு.ரோஹண விஜேவீரவுக்கு சொந்தமாக இருந்து பின்னர் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட உலபனேயில் அமைந்துள்ள வீட்டில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் தொழிற்பயிற்சி நிலையமொன்று நடத்தப்பட்டு வருகின்றது என்பதையும்;

(ii) இந்நிறுவனத்தில் தற்போது சுமார் 500 மாணவர்கள் கற்கின்றார்கள் என்பதையும்;

(iii) இது முன்னேற்றகரமான நிலையில் இருக்கின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(ஆ) (i) இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட திகதி தொடக்கம் இற்றை வரை 5000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் தொழிற்பயிற்சி பெற்று வெளியேறியுள்ளார்கள் என்பதையும்;

(ii) இவ்வாறிருக்கையில் இந்நிறுவனத்தை உலபனே பிரதேசத்திலிருந்து அகற்றி வேறொரு பிரதேசத்துக்கு கொண்டு செல்வதற்கு தேசிய இளைஞர் சேவை மன்றம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) உலபனே பிரதேசத்தில் முன்னேற்றகரமான நிலையில் நடத்தப்பட்டு வரும் இந்நிறுவனத்தை வேறொரு பிரதேசத்துக்கு கொண்டு செல்வதற்கான காரணங்கள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1206/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) L.T.T.E. பயங்கரவாதிகளினால் 1983 ஆம் ஆண்டின் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் படுகொலை செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) இவ்வெண்ணிக்கை, ஒவ்வோர் இனத்தின் படி வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவ்வாறு கொலை செய்யப்பட்ட,

(i) ஒவ்வோர் அரசியல் கட்சியினது தலைவர்கள் அல்லது உறுப்பினர்களின் எண்ணிக்கை;

(ii) ஒவ்வொரு மதத்துக்குரிய மதத் தலைவர்கள் அல்லது மதத்தைச் சேர்ந்த மக்களின் எண்ணிக்கை;

(iii) அரச அலுவலர்களின் எண்ணிக்கை;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேலே (அ) மற்றும் (ஆ) வில் வினவப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக முழுமையான ஓர் அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதை மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1277/ '16

கௌரவ காஞ்சன விஜேசேகர,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தேசிய பொருளாதாரத்தையும் அதேபோன்று இலங்கை மக்களையும் ஒரே விதத்தில் உரமூட்டுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற இலங்கையின் கடற்றொழிலாளர் சமுதாயம் தங்களது கைத்தொழிலை பெரும் தடைகளுக்கு மத்தியிலேயே பேணிவருகின்றார்கள் என்பதையும்;

(ii) இவர்கள் முகம்கொடுக்கும் பல்வேறுபட்ட இன்னல்களுக்கு மேலதிகமாக, சமுத்திர வளங்களை கொள்ளையிடும் வெளிநாட்டவர்களின் தொந்தரவு களையும் எதிர்கொள்ள நேரிட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சர்வதேச சமுத்திர எல்லையை அத்துமீறியதன் காரணமாக வெளிநாடுகளில் கைதுசெய்யப்பட்ட இலங்கை கடற்றொழிலாளர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட கலங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது கைதுசெய்யப்பட்டுள்ள இலங்கை கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை, கைதுசெய்து தடுத்துவைக்கப்பட்டுள்ள நாட்டிற்கேற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கையின் சமுத்திர எல்லைகளை அத்துமீறியமையின் காரணமாக இந்நாட்டில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை அவர்கள் சார்ந்த நாட்டிற்கேற்ப தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) வெளிநாடுகளில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை கடற்றொழிலாளர்களை விடுவித்துக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1278/ ’16

கௌரவ நளின் பண்டார ஜயமஹ,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.10.01 ஆம் திகதியாகின்றபோது கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கத்திற்கு சொந்தமாகவிருந்த மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) 2016.06.11 ஆம் திகதியாகின்றபோது மேற்படி சங்கத்திற்கு சொந்தமாகவிருந்த நிலையான வைப்புக்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது மேற்படி சங்கத்திலிருந்து கடன் பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கடன் விண்ணப்பதாரிகளில், கடன் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் இற்றைவரை கடன் தொகை விடுவிக்கப்படாதுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கடன் விண்ணப்பதாரிகளுக்கு செலுத்த வேண்டியுள்ள மொத்த கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி கடன் விண்ணப்பதாரிகளுக்கு கடன் விடுவிக்கப்பட தாமதம் ஏற்பட்டுள்ளமைக்கான காரணம் யாதென்பதையும்;

(vii) மேற்படி சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு உரியவாறு கடன் தொகையை விடுவிப்பதற்கு இயலாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(viii) ஆமெனில், மேற்படி சங்கத்தின் நிதி நிருவாகத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2017 பெப்ரவரி 22, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

534/ ’16

கௌரவ புத்திக பத்திரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டளவில் இலங்கையில் கௌபி பயிர்செய்யப்பட்ட நிலப்பரப்பு எவ்வளவு;

(ii) 2010 முதல் 2015 வரையிலான ஐந்து ஆண்டுகளில் கௌபி உற்பத்தி, ஆண்டுவாரியாக வெவ்வேறாக எத்தனை கிலோகிறாம்;

(iii) அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கௌபியை கொள்வனவு செய்கின்றதா;

(iv) ஆமெனில், கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசாங்கம் கொள்வனவு செய்துள்ள கௌபியின் அளவு எவ்வளவு;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கௌபி உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில், அந்த நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது இலங்கைக்கு கௌபி இறக்குமதி செய்யப்படுகின்றதா,

(ii) ஆமெனில், கடந்த ஐந்து ஆண்டுகளினுள் இறக்குமதி செய்யப்பட்ட கௌபியின் அளவு, ஆண்டுவாரியாக தனித்தனியாக எவ்வளவு;

(iii) இலங்கை கௌபியை ஏற்றுமதி செய்கின்றதா;

(iv) ஆமெனில், கடந்த ஐந்து ஆண்டுகளினுள் ஏற்றுமதி செய்யப்பட்ட கௌபியின் அளவு, ஆண்டுவாரியாக தனித்தனியாக எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

921/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 சனவரி முதல் 2015 சனவரி வரையிலான காலப்பகுதியில் வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சில் இடம்பெற்றுள்ள ஊழல், மோசடி மற்றும் அரச சொத்துக்களை தவறாக பயன்படுத்துதல் சம்பந்தமாக அமைச்சு மட்டத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு விசாரணையினதும் முன்னேற்றம் யாதென்பதையும்;

(iii) மேற்படி ஊழல் மற்றும் மோசடிகளுடன் அமைச்சின் உத்தியோகத்தர்கள் தொடர்புபட்டுள்ளார்களென இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், இவர்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

962/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் தற்போது இயங்கிவரும் பீடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அங்கு இயங்கிவரும் திணைக்களங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு பீடத்திலும் மற்றும் திணைக்களத்திலும் இருக்கவேண்டிய நிரந்தர விரிவுரையாளர் குழாம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) நிரந்தர விரிவுரையாளர் குழாமில் வெற்றிடங்கள் நிலவுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பீடத்தின்படியும் திணைக்களத்தின்படியும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

991/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவர்கள் அல்லது இணைத் தலைவர்களாக பாராளுமன்ற உறுப்பினர் அல்லாதோர் நியமிக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், அவர்கள் தலைவர் பதவியேற்றுள்ள பிரதேச அபிவிருத்திக் குழுக்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி தலைவர்களுக்கான அதிகாரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஆட்கள் மேற்கூறிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(v) மேற்படி ஆட்களின் அதிகூடிய கல்வித் தகைமைகள் அல்லது தொழிற்தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி தலைவர்களுக்கு/ இணைத் தலைவர்களுக்கு வழங்கப்படும் சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் வேறு வசதிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1037/ '16

கௌரவ இந்திக்க அனுருத்த ஹேரத்,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புலம்பெயர் வள நிலையங்களை தாபிப்பதற்கென 2016 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 400 மில்லியன் தொகையில் இன்றளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள மாவட்டங்களும் இடங்களும் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) இந் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வளங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நிலையங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) அவற்றின் மூலம் சேவைகள் வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டத்தின் காரணமாக வெளிநாட்டு தொழில்களை நாடும் ஆட்களின் தரம் அதிகரித்துள்ள விதம் யாதென்பதையும்;

(ii) இக்கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் பூர்த்திசெய்யப் பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1062/ '16

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சசரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கில் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் உள்ளனரென்பதையும்;

(ii) வெகுசன ஊடக அமைச்சினால் இவர்களுக்கு ரூபா.10 இலட்சம் பெறுமதியான வீடுகள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) அதற்கிணங்க வடக்கில் மூன்று ஊடகவியலாளர்களைத் தெரிவுசெய்து அவர்களுக்கு வீடுகளை வழங்கும் பொறுப்பினை மூன்று ஊடக நிறுவனங்கள் பொறுப்பேற்றுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வேலைத்திட்டத்தின் தற்போதைய நிலைமை யாது;

(ii) இதற்கு மேலதிகமாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு வீடுகளை வழங்கக்கூடிய வேறு திட்டங்கள் உள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1097/ '16

கௌரவ அசோக்க பிரியந்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புத்தளம் மாவட்டத்தினுள் அமைந்துள்ள,

(i) தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) ஒவ்வொரு தேசிய பாடசாலையினதும் பெயர் யாதென்பதையும்;

(iii) ஒவ்வொரு தேசிய பாடசாலையிலும் கல்வி பயிலும் மாணவர் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iv) ஒவ்வொரு தேசிய பாடசாலையிலும் கடமையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(v) மேற்படி பாடசாலைகளுக்கு மத்தியில் தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் மற்றும் மொழி ஆய்வுகூடங்கள் போன்ற வசதிகளைக் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(vi) மேற்படி பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனில், அவை எப்பாடங்களுக்காக என்பதையும்;

(viii) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1106/ '15

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்,— நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மன்னார் அலுவலகத்தில் காணப்பட்ட பதவி வெற்றிடங்களுக்கு தற்காலிக மற்றும் அமைய அடிப்படையில் 09 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) இவர்கள் 06 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் அமைய அடிப்படையில் கடமையாற்றுகின்றனர் என்பதையும்;

(iii) இந்த அமைய ஊழியர்களை பதவிகளில் நிரந்தரமாக்காமல் கடந்த மாதம் தொடக்கம் வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 06 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கி, இந்த அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) 06 வருடங்களுக்கும் மேற்பட்ட அமைய சேவைக்காலத்தைக் கொண்ட ஊழியர்களை பதவிகளில் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1142/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று கிரான் தெற்குப் பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அப் பிரதேச செயலாளர் பிரிவின் மூலம் உள்ளடக்கப்படும் மொத்த நிலப் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(iv) அதிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(v) அக்கிராம அலுவலர் பிரிவுகளின் உத்தியோகபூர்வ இலக்கங்களும் பெயர்களும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அப் பிரதேச செயலாளர் பிரிவைத் தாபிக்கும்போது உத்தியோகபூர்வமாக எல்லைகளை நிர்ணயித்தல் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அப் பிரதேச செயலகத்திற்குரிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஏதேனும் பிரிவின்/பிரிவுகளின் நிருவாக நடவடிக்கைகள் அல்லது தொழிற்பாடுகள் வேறு பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள், உத்தியோகபூர்வ இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1166/ '16

கௌரவ மஹிந்தானந்த அளுத்கமகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாவலபிட்டிய தேர்தல் தொகுதிக்குரிய எத்கால பிரதேசத்தில், அரச மரக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான உதவி பிரதேச முகாமைத்துவ அலுவலகம், மரஆலை மற்றும் மரக் களஞ்சியமொன்று பேணிவரப்படுகின்றதென்பதையும்;

(ii) சட்டரீதியாக பெறப்பட்ட காணியில், மிகவும் இலாபகரமான விதத்தில் இந்த நிறுவனம் பேணிவரப்படுகின்றதையும், சுமார் 35 ஊழியர்கள் இங்கு பணியாற்றுவதையும் மற்றும் இதன் மூலம் இப்பிரதேசத்துக்கு பாரிய சேவை ஆற்றப்படுகின்றதையும் ஏற்றுக்கொள்கிறாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அரச மரக் கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரியொருவரின் செல்வாக்கின் மூலம் இந்த நிறுவனத்தை குண்டசாலைப் பிரதேசத்துக்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1207/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) L.T.T.E. பயங்கரவாதிகளினால் 1983 ஆம் ஆண்டின் பின்னர் வவுனியா மாவட்டத்தில் கொலை செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) இவ்வெண்ணிக்கை, ஒவ்வோர் இனத்தின் படி வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவ்வாறு கொலை செய்யப்பட்ட,

(i) ஒவ்வோர் அரசியல் கட்சியினது தலைவர்கள் அல்லது உறுப்பினர்களின் எண்ணிக்கை;

(ii) ஒவ்வொரு மதத்துக்குரிய மதத் தலைவர்கள் அல்லது மதத்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை;

(iii) அரச அலுவலர்களின் எண்ணிக்கை;

எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேலே (அ) மற்றும் (ஆ) வில் வினவப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக முழுமையான அறிக்கையொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும் மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1279/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தமது குடியிருப்புக்காக அல்லது பயிர்ச் செய்கைக்காக அல்லது வர்த்தக நடவடிக்கைகளுக்காக மரபுரிமைக் காணிகளைக் கொண்டிருக்காத மக்கள் அரசுக்குச் சொந்தமான காணிகளைத் தமது பயன்பாட்டுக்காக அனுமதியின்றி பயன்படுத்துகின்றனர் என்பதையும்;

(ii) காலப் போக்கில் அவ்வாறு அனுமதியின்றி பயன்படுத்தப்படுகின்ற காணிகளை அரச உரிமையிலிருந்து அகற்றி, முறைசார்ந்த விதத்தில் கையளிக்கும் நடைமுறையொன்று ஒவ்வொரு அரசாங்கத்தினாலும் பேணிவரப்பட்டது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம், 2013 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மாத்தறை மாவட்டத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள உறுதிகள், அளிப்புப் பத்திரங்கள், உரித்துப் பத்திரங்கள் அல்லது உரிமப் பத்திரங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையானது மாத்தறை மாவட்டத்தின் பிரதேச செயலாளர் பிரிவு மட்டங்களில் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) மாத்தறை மாவட்டத்தில் அரச காணிகளை அனுமதியின்றிப் பயன்படுத்துகின்ற, இருப்பினும், எதுவித சட்ட ரீதியான ஆவணத்தையும் கொண்டிராத ஆட்களின் எண்ணிக்கை, பிரதேச செயலாளர் பிரிவின் பிரகாரம் தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களுக்கு அளிப்புப் பத்திரத்தை அல்லது ஆகக் குறைந்தது உரிமப் பத்திரத்தை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1319/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த தினங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு/மண்சரிவு அனர்த்தங்கள் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இன்றளவில் ஒரு குடும்பத்திற்கு ரூபா 10,000/- மட்டுமே கிடைத்துள்ளது எள்பதையும்;

(ii) மேற்படி அனர்த்தம் காரணமாக சேதத்திற்கு உள்ளான சொத்துக்கள் மற்றும் வீடுகளுக்காக அரசாங்கம் வழங்க உறுதியளித்திருந்த நிவாரணங்கள் அதாவது, பொருட்களுக்காக பணம் மற்றும் வீடுகளை அமைத்துக் கொள்வதற்காக மாற்றுக் காணிகள் இதுவரையிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதையும்;

(iii) மேலும், பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு மூன்று மாதச் சம்பளம் வட்டியில்லாக் கடனாக வழங்கப்படுமெனக் கூறப்பட்ட போதிலும் குறித்த கடன்தொகை இதுவரையிலும் இவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன் தொகை அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படுமா என்பதையும்; ஆமெனில் மேற்படி தொகை வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்க வேண்டியுள்ள எஞ்சிய தொகை, வீடுகளை அமைத்துக்கொள்வதற்கான காணிகள் மற்றும் உதவிகள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1340/ '16

கௌரவ அஜித் மான்னப்பெரும,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், நெரியம்மடுவ பிரதேசத்தின், 6 ஆம் கட்டை, படைக்காடு, உன்னிச்சிய பிரதேசத்தில் அமைந்துள்ள 30 ஏக்கர் பரப்பளவுடைய வயற்காணி 99 ஆண்டு கால குத்தகையின் அடிப்படையில் அரசாங்கத்தினால் 1956.09.30 ஆம் திகதியன்று, அச்சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பு, பன்சல வீதி, 34 ஆம் இலக்கத்தில் வசித்த திரு. தர்மதாச தென்னஹேவாவுக்கு வழங்கப்பட்டிருந்ததென்பதையும்;

(ii) பயங்கரவாத யுத்தத்தின் காரணமாக 1987 ஆம் ஆண்டளவில் திரு. தர்மதாச தென்னஹேவாவுக்கும் குடும்ப அங்கத்தவர்களுக்கும் அப்பிரதேசத்திலிருந்து வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டதென்பதையும்;

(iii) மேலே கூறப்பட்ட வயற்காணிக்கு ஏற்புடையதான 99 ஆண்டு குத்தகை தொடர்ந்தும் செல்லுபடியானதாக உள்ளதென்பதையும்;

(iv) மேற்படி வயற்காணி தற்போது மட்டக்களப்பு, லேக் ரோட் 2, இலக்கம் 66 இல் வசிக்கும் கந்தையா யோகவேல் என்பவரால் சட்டவிரோதமானமுறையிலும் பலாத்காரமாகவும் இருப்பாட்சி செய்யப்பட்டு வருகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வயற்காணியை சட்டவிரோதமான முறையில் இருப்பாட்சி செய்து வருபவரை அகற்றி சட்டபூர்வமாக அக்காணியின் இருப்பாட்சிக்கு உரித்துடைய, மரணமடைந்த திரு. தர்மதாச தென்னஹேவாவின் பின்னுரித்தாளிகளுக்கு இதன் உடைமையை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல் அதற்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1341/ '16

கௌரவ ஹேஷான் விதானகே,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின் எம்பிலிப்பிட்டிய – மொரகெட்டிய பிரதான வீதியானது பெருமளவிலான மக்கள் நாளாந்தம் பயன்படுத்துகின்ற ஒரு வீதியாகும் என்பதையும்;

(ii) அந்த வீதியின் ஒரு பகுதி இற்றைவரை எதுவித மறுசீரமைப்புக்கும் உள்ளாக்கப்படவில்லையென்பதையும்;

(iii) இதன் காரணமாக மேற்படி வீதியை நாளாந்தம் பயன்படுத்துகின்ற பெருமளவிலானவர்கள் நித்தமும் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அதன் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2017 பெப்ரவரி 23, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

680/ '16

கௌரவ புத்திக பத்திரண,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சீரகம் மற்றும் பெருஞ்சீரகத்தின் அளவு யாதென்பதையும்,

(ii) இலங்கைக்கு சீரகம் மற்றும் பெருஞ்சீரகம் இறக்குமதி செய்யப்படுகின்ற பிரதான நாடுகள் யாவையென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையில் சீரகம் மற்றும் பெருஞ்சீரகம் செய்கை பண்ணப்படுகின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது இலங்கையின் தேவையில் எத்தனை சதவீதம் என்பதையும்,

(iii) சீரகம் மற்றும் பெருஞ்சீரகம் செய்கை பண்ணப்படவில்லையெனில் அது ஏனென்பதையும்,

(iv) இலங்கையினுள் சீரகம் மற்றும் பெருஞ்சீரகச் செய்கையை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

922/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மேல் மாகாணத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு பணம் வைப்புச் செய்யப்பட்டதன் பின்னர் வழங்கப்படுமென வாக்குறுதியளிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களை வழங்குவதாகத் தெரிவித்து 2015.11.14 மற்றும் 2015.11.21 ஆகிய இரண்டு திகதிகளில் அழைப்பு விடுக்கப்பட்டதென்பதையும்;

(ii) அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வட மேல் மாகாண வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

963/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அழகியற்கலைப் பல்கலைக்கழகத்தில் தற்போது இயங்கிவரும் பீடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அங்கு இயங்கிவரும் திணைக்களங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு பீடத்திலும் மற்றும் திணைக்களத்திலும் இருக்கவேண்டிய நிரந்தர விரிவுரையாளர் குழாம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) நிரந்தர விரிவுரையாளர் குழாமில் வெற்றிடங்கள் நிலவுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பீடத்தின்படியும் திணைக்களத்தின்படியும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

992/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கல்வி நிர்வாகச் சேவையின் உத்தியோகத்தர் திரு.சம்பத் வேரகொட காலி ரிச்மன்ட் கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) இவர் மொரட்டுவ வேல்ஸ் குமர கல்லூரி அதிபராக சேவையாற்றிய காலத்தில் நிதி மோசடி செய்தமை தொடர்பாக நடத்தப்பட்ட புலன்விசாரணை நடவடிக்கைகள் எப்போது நிறைவடைந்தன என்பதையும்;

(iii) அவ்வாறெனின், அந்தப் புலன்விசாரணையின் முடிவுகள் மற்றும் சிபாரிசுகள் யாவை என்பதையும்;

(iv) இவருக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு பற்றிய புலனாய்வு ஆணைக்குழு முன்னெடுக்கும் புலன்விசாரணை முடிவடைந்துள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அதன் முடிவுகள் மற்றும் சிபாரிசுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1038/ '16

கௌரவ இந்திக்க அனுருத்த ஹேரத்,— ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டுக்கு முன்னர் கறுவா, மிளகு, பாக்கு, கராம்பு, வெற்றிலை மற்றும் கொக்கோ ஆகிய பயிர்களின் நிலைமையுடன் ஒப்பிடுமிடத்து 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஏற்றுமதி அதிகரித்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பயிரினதும் ஏற்றுமதி அதிகரித்துள்ள சதவீதம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) புதிய பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டுகளில் பயிர்ச் செய்கை நடவடிக்கை அதிகரிக்கப்பட்டுள்ள ஹெக்டேயர்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) உருவாக்கப்பட்டுள்ள தயாரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்கொள்ளப்பட்டுள்ள இயந்திர சாதன விநியோகங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) ஆரம்பிக்கப்பட்டுள்ள சேதனப் பசளை கிராமங்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் பூங்காக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி நடவடிக்கைகள் செயற்படுத்தப்படவில்லை எனில் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட ரூபா 500 மில்லியன் தொகை என்ன விடயத்துக்காக பயன்படுத்தப்பட்டதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கம்பஹா மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட சிறு ஏற்றுமதி பயிர் ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இதன் காரணமாக விளைச்சல் அதிகரித்துள்ள அளவு எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1143/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று வாகரை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அப் பிரதேச செயலாளர் பிரிவின் மூலம் உள்ளடக்கப்படும் மொத்த நிலப் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(iv) அதிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) அக்கிராம அலுவலர் பிரிவுகளின் உத்தியோகபூர்வ இலக்கங்களும் பெயர்களும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அப் பிரதேச செயலாளர் பிரிவைத் தாபிக்கும்போது உத்தியோகபூர்வமாக எல்லைகளை நிர்ணயித்தல் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அப் பிரதேச செயலகத்திற்குரிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஏதேனும் பிரிவின்/பிரிவுகளின் நிருவாக நடவடிக்கைகள் அல்லது தொழிற்பாடுகள் வேறு பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள், உத்தியோகபூர்வ இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1157/ '16

கௌரவ அசோக பிரியந்த,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபை தாபிக்கப்பட்ட திகதி யாது;

(ii) இற்றை வரை வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை;

(iii) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு தொடக்கம் இன்று வரை அங்கு கடமையாற்றிவரும் பிரதான அலுவலர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களின் பதவிகள் யாவை;

(iv) பிரதேசத்திலுள்ள பல்வேறு சுற்றாடல் அமைப்புக்கள் மேற்படி சுற்றாடல் அதிகாரசபையின் நடவடிக்கைகளுக்கு எதிராக செயற்படுகின்றன என்பதை அறிவாரா;

(v) ஆமெனில், வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபையின் அலுவல்கள் தொடர்பாக முறையான விசாரணை நடாத்தி ஏற்புடைய அதிகாரிகளுக்கு எதிராக செயலாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1208/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) L.T.T.E. பயங்கரவாதிகளினால் 1983 ஆம் ஆண்டின் பின்னர் அம்பாறை மாவட்டத்தில் கொலை செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) இவ்வெண்ணிக்கை, ஒவ்வோர் இனத்தின் படி வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவ்வாறு கொலை செய்யப்பட்ட,

(i) ஒவ்வோர் அரசியல் கட்சியினது தலைவர்கள் அல்லது உறுப்பினர்களின் எண்ணிக்கை;

(ii) ஒவ்வொரு மதத்துக்குரிய மதத் தலைவர்கள் அல்லது மதத்தைச் சேர்ந்த மக்களின் எண்ணிக்கை;

(iii) அரச அலுவலர்களின் எண்ணிக்கை;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேலே (அ) மற்றும் (ஆ) வில் வினவப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக முழுமையான ஓர் அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும் மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1281/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் அமைச்சிற்குரிய, பின் அறுவடைத் தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் வெளிக்கள அலுவலகமொன்று மாத்தறை கெக்கனதுர கமநல மத்திய நிலையத்தில் தாபிக்கப்பட்டிருந்தது என்பதையும்;

(ii) 2016.10.12 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மேற்கூறிய வெளிக்கள அலுவலகம் மூடப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) அதற்கு நேரொத்த வகையில் காலி வெளிக்கள அலுவலகமும் மூடப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பின் அறுவடைத் தொழில்நுட்பத்தை அதிகளவில் பிரபல்யப்படுத்தக்கூடிய நிலையில் இருக்கையில், இருக்கின்ற உட்கட்டமைப்பு வசதிகளையும் இவ்வகையில் குறைப்பதன் மூலம் விவசாய மக்கள் சிரமத்துக்கு உள்ளாகின்றனர் என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) ஆமெனில், தற்போது மூடப்பட்டுள்ள வெளிக்கள அலுவலகமொன்றை உடனடியாகத் திறந்து விவசாய மக்களுக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1342/ '16

கௌரவ ஹேஷான் விதானகே,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எம்பிலிப்பிட்டிய தேசிய காகிதத் தொழிற்சாலை தற்போது மூடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) கடந்த ஆட்சிக் காலத்தில் இந்நிறுவனத்திற்குச் சொந்தமான வளங்கள் மற்றும் சொத்துக்கள் பல்வேறுபட்ட ஆட்களால் திருடிச் செல்லப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) அதன் காரணமாக இந்நிறுவனம் முழுமையாக அழிவடைந்துள்ளதென்பதையும்;

(iv) அதில் தொழிலில் ஈடுபட்டிருந்த மற்றும் அதனூடாக மறைமுகமாக வருமானம் ஈட்டிய பெரும்தொகையானோர் இதன் காரணமாக பொருளாதார ரீதியாகவும் உள ரீதியாகவும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனம் அழிவடைந்துள்ளமை தொடர்பாக முறைசார்ந்த புலனாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் மூலம் வெளிப்படுத்திக்கொள்ளப்பட்ட தகவல்கள் யாவையென்பதையும்;

(iii) அத் தகவல்களின் அடிப்படையில் இனங்காணப்பட்ட சந்தேக நபர்கள் சம்பந்தமாக சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1347/ '16

கௌரவ லக்கீ ஜயவர்தன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "அண்மித்த பாடசாலை - சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள உடுநுவர தேர்தல் தொகுதியிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட பாடசாலைகள் யாவை என்பதையும்;

(iii) தற்சமயம் மேற்படி பாடசாலைகளில் புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பாடசாலைகள் யாவை என்பதையும்;

(iv) இப்பாடசாலைகளில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) "அண்மித்த பாடசாலை – சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளில் இடவசதி குறைவாக காணப்படும் பாடசாலைகளுக்காக கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்படவில்லையென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கட்டட வசதிகள் மிகவும் தேவையான பாடசாலைகளுக்கு கட்டடங்களை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகளுக்கும் விரைவில் கட்டட வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1349/ '16

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள பாடசாலை மாணவர்கள் பொதுவாக தொழில் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு முன்வருகின்றார்கள் இல்லையென்பதையும்;

(ii) இன்றைய காலகட்டத்தில் இலங்கையின் தொழில் சந்தையின் கேள்வியை நிரப்புகின்றபோது இளம் சந்ததியினரிடமுள்ள திறன்களில் பொருந்தாத தன்மை காணப்படுகின்றதென்பதையும்;

(iii) பிள்ளைகளுக்கு பல்வகை ஆற்றல்களுக்கான பயிற்சிகளை பெற்றுக்கொடுத்து, புதிய தொழில் வாய்ப்புக்களை வழங்க வேண்டிய அத்தியாவசிய தேவை காணப்படுகின்றதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆரம்ப நிலை தொடக்கம் மூன்றாம் நிலை வரை பாடசாலை மாணவர்களின் தொழில் ஆற்றல்களை வளர்ப்பதற்கு உறுதுணையாகும் முகமாக, கல்வி அமைச்சினதும் ஒத்துழைப்புடன் பாடசாலை பாடத்திட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

833/ '16

கௌரவ புத்திக பத்திரண,— தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தமிழ் பேசுகின்ற மக்களுக்கு சிங்கள மொழியைக் கற்பிக்கவும், சிங்களம் பேசுகின்ற மக்களுக்கு தமிழ் மொழியைக் கற்பிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

(iii) பாடசாலையைவிட்டு நீங்கிச்சென்ற தொழிலற்றவர்களுக்கு, அரசாங்க ஊழியர்களுக்கு மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கு தமிழ் மற்றும் சிங்கள மொழியைக் கற்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா;

(iv) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த கற்பித்தல் பணிகளுக்கு போதியளவு எண்ணிக்கையுடைய ஆசிரியர்கள் உள்ளனரா;

(ii) ஆமெனில், அவ்வாசிரியர்களைத் தெரிவுசெய்யும் முறையியல் யாது;

(iii) இன்றேல், ஆசிரியர்களை ஆட்சேர்ப்புசெய்ய நடவடிக்கை எடுப்பாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளைக் கற்பிப்பதற்காக நிதியேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், மேற்படி பணத்தொகை எவ்வளவு;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

964/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் தற்போது இயங்கிவரும் பீடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அங்கு இயங்கிவரும் திணைக்களங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு பீடத்திலும் மற்றும் திணைக்களத்திலும் இருக்கவேண்டிய நிரந்தர விரிவுரையாளர் குழாம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) நிரந்தர விரிவுரையாளர் குழாமில் வெற்றிடங்கள் நிலவுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பீடத்தின்படியும் திணைக்களத்தின்படியும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1144/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அப் பிரதேச செயலாளர் பிரிவின் மூலம் உள்ளடக்கப்படும் மொத்த நிலப் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(iv) அதிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(v) அக்கிராம அலுவலர் பிரிவுகளின் உத்தியோகபூர்வ இலக்கங்களும் பெயர்களும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அப் பிரதேச செயலாளர் பிரிவைத் தாபிக்கும்போது உத்தியோக பூர்வமாக எல்லைகளை நிர்ணயித்தல் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அப் பிரதேச செயலகத்திற்குரிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஏதேனும் பிரிவின்/பிரிவுகளின் நிருவாக நடவடிக்கைகள் அல்லது தொழிற்பாடுகள் வேறு பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள், உத்தியோகபூர்வ இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2017 மார்ச்சு 07, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

834/ '16

கௌரவ புத்திக பத்திரண,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு ,— (2)

(அ) (i) கஞ்சா, அபின், போதை மாத்திரைகள், பாணி மருந்து, மதன மோதகம் மற்றும் அதனையொத்த போதைப்பொருட்கள் சமூகத்தில் துரிதமாக பரவியுள்ளதென்பதையும்;

(ii) இந்த போதைப்பொருள் வியாபாரம் பாடசாலைகளினுள்ளும் பரவியுள்ளதென்பதையும்;

(iii) பாடசாலை மாணவர்களும் இதற்கு அடிமையாகும் போக்கு நிலவுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி போதைப்பொருட்களுக்கு மேலதிகமாக பாடசாலைகளைச் சார்ந்ததாக பாவிக்கப்படுவதாக அறியவந்துள்ள வேறு போதைப்பொருள் வகைகள் யாவை;

(ii) 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் பாடசாலைகளை சார்ந்ததாக போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டவர்களையும் அதனோடு தொடர்புடைய பாடசாலை மாணவர்களையும் கைதுசெய்தல் இடம்பெற்றுள்ளதா;

(iii) ஆமெனில், அவ்வெண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) மேற்படி மாணவர்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பாடசாலைகளினுள் போதைப்பொருட்கள் பரவுவதை தடுக்க மேற்கொண்டுள்ள ஏனைய நடவடிக்கைகள் யாவை;

(ii) அது சம்பந்தமான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா;

(iii) ஆமெனில், அவை யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

929/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு தூதுப் பணிக்கு நியமனம் பெற்ற இராஜதந்திர உத்தியோகத்தர்களுக்கு இலங்கையிலிருந்து சேவை உதவியாளர் பதவிக்கு ஆட்களை அழைத்துச் செல்ல முடியுமென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2005.01.01 தொடக்கம் 2015.01.01 வரையான காலப்பகுதியில் தூதரகங்களுக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் இவர்களால் அழைத்துச் செல்லப்பட்ட சேவை உதவியாளர்களின் பெயர்கள், வெளிநாட்டுக் கடவுச் சீட்டு இலக்கங்கள் மற்றும் முகவரிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) ஏற்புடைய கடமைகள் நிறைவடைந்ததன் பின்னர் உத்தியோகத்தர்கள் மற்றும் சேவை உதவியாளர்கள் இலங்கைக்கு வருகை தந்த திகதிகளும் ஒவ்வொரு சேவை உதவியாளரினதும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு இரத்தாகும் திகதியும் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) உத்தியோகத்தர்கள் இலங்கைக்கு திரும்பி வருகின்றபோது இவர்களுடன் வருகை தராத சேவை உதவியாளர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) இலங்கைக்கு திரும்பாத சேவை உதவியாளர்கள் தொடர்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

993/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குமுறையாக்கல் ஆணைக்குழுவினால் "த றேடியோ சொசயிடி ஒவ் ஸ்ரீ லங்கா" எனப்படும் இலங்கை வானொலிக் கழகம், பயிலுநர் வானொலி இயக்குநர்களின் தேசிய நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அங்கீகரிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அவ்வாறு அங்கீகரிக்கப்படுவதற்கு ஏதுவாயமைந்த அடிப்படை யாதென்பதையும்;

(iv) அவ்வாறு அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக ஏதேனும் ஆவணம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், அந்த ஆவணத்தை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1014/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் அமைச்சுக்கு வாடகை அடிப்படையில் புதிதாக கட்டிடமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி திகதி யாது என்பதையும்;

(iii) அதற்காக கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்க முன்வந்த ஆட்கள் மற்றும் அவர்கள் சமர்ப்பித்த விலை மனுக்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(v) வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடத்திற்கான அரசாங்க விலைமதிப்பு, உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி, மாதாந்த வாடகை மற்றும் செலுத்தப்பட்ட முற்பணத் தொகை யாது என்பதையும்;

(vi) மேற்படி கட்டடத்திற்காக உரிமையாளருடன் கையொப்பமிடப்பட்ட குத்தகை உடன்படிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) கமத்தொழில் அமைச்சு மேற்படி கட்டிடத்திற்கு கொண்டு செல்லப்பட்ட திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1145/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அப் பிரதேச செயலாளர் பிரிவின் மூலம் உள்ளடக்கப்படும் மொத்த நிலப் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(iv) அதிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(v) அக்கிராம அலுவலர் பிரிவுகளின் உத்தியோகபூர்வ இலக்கங்களும் பெயர்களும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அப் பிரதேச செயலாளர் பிரிவைத் தாபிக்கும்போது உத்தியோக பூர்வமாக எல்லைகளை நிர்ணயித்தல் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அப் பிரதேச செயலகத்திற்குரிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஏதேனும் பிரிவின்/பிரிவுகளின் நிருவாக நடவடிக்கைகள் அல்லது தொழிற்பாடுகள் வேறு பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள், உத்தியோகபூர்வ இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1209/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) L.T.T.E. பயங்கரவாதிகளினால் 1983 ஆம் ஆண்டின் பின்னர் திருகோணமலை மாவட்டத்தில் கொலை செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) இவ்வெண்ணிக்கை, ஒவ்வோர் இனத்தின் படி வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவ்வாறு கொலை செய்யப்பட்ட,

(i) ஒவ்வோர் அரசியல் கட்சியினது தலைவர்கள் அல்லது உறுப்பினர்களின் எண்ணிக்கை;

(ii) ஒவ்வொரு மதத்துக்குரிய மதத் தலைவர்கள் அல்லது மதத்தைச் சேர்ந்த மக்களின் எண்ணிக்கை;

(iii) அரச அலுவலர்களின் எண்ணிக்கை;

எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேலே (அ) மற்றும் (ஆ) வில் வினவப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக முழுமையான ஓர் அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1283/ '16

கௌரவ டலஸ் அழகப்பெரும,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் வீடுகள் இல்லாதவர்கள் என இனங்காணப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை ;

(ii) மாத்தறை மாவட்டத்தில் பகுதியளவு நிரந்தர மற்றும் நிரந்தர வீடுகளில் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை;

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2013 ஆம் தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை மாத்தறை மாவட்டத்தில் அரசின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை;

(ii) 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை மாத்தறை மாவட்டத்தில் அரச வீடமைப்புக் கடன் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை;

(iii) 2014, 2015, 2016 ஆம் ஆண்டுகளில் மாத்தறை மாவட்டத்தில் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை;

ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1343/ ’16

கௌரவ ஹேசான் விதானகே,— மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் துன்புறுத்தல்கள் காரணமாக இலங்கையில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் பெருமளவில் நீதிமன்றத்திற்கு வருகின்றார்கள் என்பதையும்;

(ii) இவர்கள் பகிரங்க நீதிமன்றத்திலும் ஊடகங்கள் மூலமாகவும் அடிக்கடி நேரடியற்ற வகையில் மீண்டும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கும் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாகின்றனர் என்பதையும்;

(iii) இதன் மூலம் அவர்கள் சமூகத்துடன் கலக்கும் போது பல்வேறு பிரச்சினை களுக்கும் உளரீதியிலான பலவீனங்களுக்கும் உள்ளாகி கஷ்டப்படுகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறிய காரணத்தினால் இலங்கையில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக விசேட நீதிமன்றமொன்றை அமைப்பதற்கு முன்மொழிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறான நிலையில் அவர்களது எதிர்கால நலனுக்காக ஊடகங்கள் மீது செய்திகளை வெளியிடுவது தொடர்பாக வரையறைகளை விதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கு செல்லும் காலம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

844/ ’16

கௌரவ புத்திக்க பத்திறண,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கதிர்காமம், நல்லூர், முன்னேஸ்வரம், திருக்கோனேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள இலங்கை இந்து மதத்தவரின் பிரதான வழிபாட்டுத் தலங்களை வழிபடுவதற்காக வெளிநாட்டவர்களும் வருகை தருகின்றனர் என்பதையும்;

(ii) இவ் வழிபாட்டுத் தலங்களில் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கும் உள்நாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கும் போதியளவு வசதிகள் இல்லை என்பதையும்;

(iii) இவ்விடங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்துக்கும் பெரும் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வழிபாட்டுத் தலங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்கின்றதா;

(ii) ஆமெனில், அது எவ்வாறு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

965/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தற்போது இயங்கிவரும் பீடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அங்கு இயங்கிவரும் திணைக்களங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு பீடத்திலும் மற்றும் திணைக்களத்திலும் இருக்கவேண்டிய நிரந்தர விரிவுரையாளர் குழாம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) நிரந்தர விரிவுரையாளர் குழாமில் வெற்றிடங்கள் நிலவுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பீடத்தின்படியும் திணைக்களத்தின்படியும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1007/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கதிர்காமம் புனித நகரத்தில், பாதுகாப்பு வலயத்தினுள் காணப்படும் "ஒசு உயன" (ஔடதப் பூங்கா) என அழைக்கப்படும் காணியில், சுமார் முப்பது ஏக்கர் பகுதி, இராணுவத்தினரையும் ஈடுபடுத்தி, மூலிகைச் செடிகள் அழிக்கப்பட்டு 2016 யூலை மாதத்தில் துப்பரவு செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதற்கு எதிராக பௌத்த பிக்குமாரின் தலைமையில் பிரதேச மக்கள் எதிர்ப்பினைத் தெரிவித்தார்கள் என்பதையும்;

(iii) எஸ்ஈஐ/289/465 ஆம் இலக்க, 1990.01.30 ஆந் திகதிய கடிதத்தின் வாயிலாக குறிப்பிட்ட காணியை, சனாதிபதி அவர்கள் தேசிய பௌதீகத் திட்டமிடல் திணைக்களத்துக்கு கையளித்துள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அழிவுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார் என்பதையும்;

(ii) இவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட அழிவானது, குறிப்பிட்ட இடத்தில் இந்தியாவின் திருப்பதிக் கோவிலின் கிளையொன்றை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iv) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாணப் பணிகளுக்கு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனமொன்றிலிருந்து அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1015/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பத்தரமுல்லை, ஜயந்திபுர பிரதேசத்தில் கமத்தொழில் அமைச்சுக்கு உரித்தான காணியொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் பரப்பளவு யாது என்பதையும்;

(iii) மேற்படி காணியின் குழப்பமற்ற உடைமை கமத்தொழில் அமைச்சுக்குக் கிடைத்த திகதி யாது என்பதையும்;

(iv) குழப்பமற்ற உடைமை கிடைத்த நீதிமன்ற உத்தரவு யாது என்பதையும்;

(v) மேற்படி காணியை பலவந்தமாக பிடித்துவைத்திருந்த ஆட்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(vi) கமத்தொழில் அமைச்சினால் மேற்படி காணிகள் தற்போது எத்தகைய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1146/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று ஓட்டமாவடி மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அப் பிரதேச செயலாளர் பிரிவின் மூலம் உள்ளடக்கப்படும் மொத்த நிலப் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(iv) அதிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(v) அக்கிராம அலுவலர் பிரிவுகளின் உத்தியோகபூர்வ இலக்கங்களும் பெயர்களும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அப் பிரதேச செயலாளர் பிரிவைத் தாபிக்கும்போது உத்தியோக பூர்வமாக எல்லைகளை நிர்ணயித்தல் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அப் பிரதேச செயலகத்திற்குரிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஏதேனும் பிரிவின்/பிரிவுகளின் நிருவாக நடவடிக்கைகள் அல்லது தொழிற்பாடுகள் வேறு பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள், உத்தியோகபூர்வ இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1210/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) L.T.T.E. பயங்கரவாதிகளினால் 1983 ஆம் ஆண்டின் பின்னர் புத்தளம் மாவட்டத்தில் கொலை செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) இவ்வெண்ணிக்கை, ஒவ்வோர் இனத்தின் படி வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவ்வாறு கொலை செய்யப்பட்ட,

(i) ஒவ்வோர் அரசியல் கட்சியினது தலைவர்கள் அல்லது உறுப்பினர்களின் எண்ணிக்கை;

(ii) ஒவ்வொரு மதத்துக்குரிய மதத் தலைவர்கள் அல்லது மதத்தைச் சேர்ந்த மக்களின் எண்ணிக்கை;

(iii) அரச அலுவலர்களின் எண்ணிக்கை;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேலே (அ) மற்றும் (ஆ) வில் வினவப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக முழுமையான ஓர் அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும் மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

846/ '16

கௌரவ புத்திக பத்திறண,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் நீண்ட காலமாக வசித்து வருகின்ற சீன வம்சாவழியினர் வாழ்கின்ற கொழும்பு மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பிரதேசங்களில் தற்போது வாழ்கின்ற சீன வம்சாவளியினரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆட்கள் இலங்கையின் வேறு பிரதேசங்களிலும் வாழ்வதாக அறியக்கிடைத்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மக்களின் கல்வி, உயர்கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய அடிப்படைத் தேவைகளுக்கான உரிமை அரசாங்கத்தினால் உறுதிசெய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி மக்களின் கலாசார தனித்துவங்களையும் பாரம்பரிய மரபுரிமைகளையும் பேணி வாழ்வதற்கு அரசாங்கம் அனுசரணை வழங்கியுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவையென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2017 மார்ச்சு 08, புதன்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

853/ '16

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் தொல்பொருளியல் திணைக்களத்துக்குரிய விகாரைகள் யாவை என்பதையும்;

(ii) பௌத்த அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட விகாரைகள் யாவை என்பதையும்;

(iii) இந்த விகாரைகளை புதையல் திருடர்கள் மற்றும்/ அல்லது திட்டமிட்டு இயங்கும் குற்றாவாளிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறெனின் , அந்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) 2012 - 2014 வரையிலான கால கட்டத்தினுள் மேற்குறிப்பிட்ட நபர்களினால் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக அறிய வந்துள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

973/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009.05.19 ஆம் திகதியில் அனுராதபுரம் மாவட்டத்தில் இருந்த மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி மதுபான விற்பனை நிலையங்கள் அமைந்துள்ள இடங்களின் முகவரிகள் யாவை;

(iii) 2010, 2011, 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டின் படி வெவ்வேறாக எவ்வளவு;

(iv) மேற்படி இடங்களின் முகவரிகள் யாவை;

(v) தற்போது அனுராதபுரம் மாவட்டத்தில் தலா மதுபான நுகர்வு எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1130/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள SAITM நிறுவனத்தின் மாணவர் குழுக்கள் யாவையென்பதையும்;

(ii) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கு அரசாங்க ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைப் பயிற்சியினைப் பெற்றுக்கொடுப்பதற்காக இலங்கையின் எந்தவொரு நீதிமன்றத்தினாலும் தங்கள் அமைச்சிற்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நீதிமன்றக் கட்டளையை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1147/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அப் பிரதேச செயலாளர் பிரிவின் மூலம் உள்ளடக்கப்படும் மொத்த நிலப்பரப்பு எவ்வளவு என்பதையும்;

(iv) அதிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(v) அக்கிராம அலுவலர் பிரிவுகளின் உத்தியோகபூர்வ இலக்கங்களும் பெயர்களும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அப் பிரதேச செயலாளர் பிரிவைத் தாபிக்கும்போது உத்தியோக பூர்வமாக எல்லைகளை நிர்ணயித்தல் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அப் பிரதேச செயலகத்திற்குரிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஏதேனும் பிரிவின்/பிரிவுகளின் நிருவாக நடவடிக்கைகள் அல்லது தொழிற்பாடுகள் வேறு பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள், உத்தியோகபூர்வ இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1211/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) L.T.T.E. பயங்கரவாதிகளினால் 1983 ஆம் ஆண்டின் பின்னர் மன்னார் மாவட்டத்தில் கொலை செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) இவ்வெண்ணிக்கை, ஒவ்வோர் இனத்தின் படி வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவ்வாறு கொலை செய்யப்பட்ட,

(i) ஒவ்வோர் அரசியல் கட்சியினது தலைவர்கள் அல்லது உறுப்பினர்களின் எண்ணிக்கை;

(ii) ஒவ்வொரு மதத்துக்குரிய மதத் தலைவர்கள் அல்லது மதத்தைச் சேர்ந்த மக்களின் எண்ணிக்கை;

(iii) அரச அலுவலர்களின் எண்ணிக்கை;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேலே (அ) மற்றும் (ஆ) வில் வினவப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக முழுமையான ஓர் அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும் மேலும் அவர் அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1285/ ’15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலக சுகாதார அமைப்பின் தரங்களுக்கு அமைய மருத்துவர்களுக்கும் சனத்தொகைக்கும் இடையில் இருக்கவேண்டிய விகிதாசாரம் எவ்வளவு என்பதையும்;

(ii) இலங்கையில் அதன் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மாத்தறை மாவட்டத்தின் மொத்த சனத்தொகைக்கு அமைய இருக்க வேண்டிய மருத்துவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) தற்போதுள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மாத்தறை மாவட்டத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சுகாதார சேவைக்குரிய மொத்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு தொழில் துறைக்கு ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

854/16

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில், தெனியாய வீச்சிடைக்குச் சொந்தமான பட்னா வனத்திற்கு அனுமதியின்றி விஹாரஹேன பாதையின் ஊடாக வெளிநாட்டவர்கள் அழைத்துச்செல்லப்பட்டு நீரோடைக்கு அருகாமையால் வனத்திற்குள் பிரவேசிப்பதையும்;

(ii) சிங்கராஜ வனத்தை பார்வையிடுவதற்காக வன பரிபாலனத் திணைக்களத்தினால் திறந்து வைக்கப்பட்டுள்ள பிடதெனிய நுழைவாயிலை இவர்கள் பயன்படுத்துவதில்லையென்பதையும்;

(iii) சிங்கராஜ வனத்தை அண்டியதாக, மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள நட்சத்திர ஹோட்டல்களில் தங்கியிருக்கும் சுற்றுலாப் பயணிகளே இவ்வாறு பிரவேசிக்கின்றனர் என்பதையும்;

(iv) இந்த நுழைவாயிலின் ஊடாக வனத்திற்குள் பிரவேசிப்பதன் மூலம் சிங்கராஜ வனத்தின் உயிரியல் பல்வகைமை பாதிக்கப்படல் மற்றும் மரபணு கொள்ளை ஆகியவற்றுக்கு பாதிப்பேற்படும் என்பதையும்;

(v) இதனூடாக அரசாங்கத்திற்கு பாரிய நிதிசார் நட்டம் ஏற்படுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சிங்கராஜ வனத்திற்கு சுற்றுலாப் பயணிகள் பிரவேசிப்பதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை தயாரிப்பாரா;

(ii) ஆமெனில், அது எத் திகதியிலிருந்து;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மாத்தறை மாவட்டத்தில், சிங்கராஜ வனத்தை அண்டியதாக அமைந்துள்ள நட்சத்திர ஹோட்டல்களினால் வனத்தினுள் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளதாக அல்லது நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கண்டுபிடிக்கப் பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நிறுவனங்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

974/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009.05.19 ஆம் திகதியில் மன்னார் மாவட்டத்தில் இருந்த மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி மதுபான விற்பனை நிலையங்கள் அமைந்துள்ள இடங்களின் முகவரிகள் யாவை;

(iii) 2010, 2011, 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டின் படி வெவ்வேறாக எவ்வளவு;

(iv) மேற்படி இடங்களின் முகவரிகள் யாவை;

(v) தற்போது மன்னார் மாவட்டத்தில் தலா மதுபான நுகர்வு எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# 2017 மார்ச்சு 09, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

855/ '16

கௌரவ புத்திக பத்திறண,— நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஜாஎல பிரதேச செயலாளர் பிரிவில், 181F கெட்டகெவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவின், இஹலகம கிராமத்தில் அமைந்துள்ள பொல்கஹ குளம் (இஹலகம) உரிய முறையில் பராமரிக்கப்படாத காரணத்தினால் அழிவுறும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளதையும்;

(ii) சில ஒழுங்கமையப்பெற்ற குழுக்கள் குளத்தை மண்ணிட்டு நிரப்புவதற்கும் குளத்துக்குரிய ஒதுக்குக் காணிகளை கைப்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்து வருவதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இஹலகம குளத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

(iii) குளத்தை புனரமைப்பதற்கு 2016 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சட்ட விரோதமான முறையில் குளத்தை மண்ணிட்டு நிரப்புதல் மற்றும் குளத்துக்குரிய காணிகளைச் சுவீகரித்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) குளத்தின் சில பகுதிகளை மண்ணிட்டு நிரப்பி கொகிலை பயிரிட்டுள்ள பிரதேசங்களை மீள சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(v) அவ்வாறு கொகிலைச் செய்கையை மேற்கொண்டுள்ள ஆட்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

975/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009.05.19 ஆம் திகதியில் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்த மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி விற்பனை நிலையங்கள் அமைந்துள்ள இடங்களின் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) 2010, 2011, 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டின்படி வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) அவ்விடங்களின் முகவரிகள் யாவையென்பதையும்;

(v) தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் தலா மதுபான பாவனை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1148/'16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, கடவத் சத்தற பிரதேச செயலாளர் பிரிவில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணியில் அமைந்துள்ள மொஹிதீன்வத்த வீடமைப்புத் திட்டத்திலுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாது;

(ii) அந்த வீடுகளில் தற்போது குடியிருப்பவர்களாக இனங்காணப்பட்டுள்ளவர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவை;

(iii) மேற்படி வீடுகளின் ஆரம்ப உரிமையாளர்களின் பெயர்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீடமைப்புத் திட்டத்திற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சுவீகரிக்கப்பட்ட காணியின் அளவு யாது;

(ii) காணி சுவீகரிக்கப்பட்ட வேளையில் காணி உரிமையாளர்/ உரிமையாளர்கள் என்றவகையில் இனங்காணப்பட்டிருந்த ஆளின்/ ஆட்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iii) மேற்படி காணியை அரசாங்கம் சுவீகரித்ததாக குறிப்பிட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா;

(iv) காணி சுவீகரித்தலுக்காக அப்போது இழப்பீடு வழங்கப்பட்டதா;

(v) ஆமெனில், அந்த இழப்பீட்டுத் தொகை யாது;

(vi) இழப்பீட்டினை பெற்ற ஆட்களின் பெயர்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1212/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) L.T.T.E. பயங்கரவாதிகளினால் 1983 ஆம் ஆண்டின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் கொலை செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) இவ்வெண்ணிக்கை, ஒவ்வோர் இனத்தின் படி வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவ்வாறு கொலை செய்யப்பட்ட,

(i) ஒவ்வோர் அரசியல் கட்சியினது தலைவர்கள் அல்லது உறுப்பினர்களின் எண்ணிக்கை;

(ii) ஒவ்வொரு மதத்துக்குரிய மதத் தலைவர்கள் அல்லது மதத்தைச் சேர்ந்த மக்களின் எண்ணிக்கை;

(iii) அரச அலுவலர்களின் எண்ணிக்கை;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேலே (அ) மற்றும் (ஆ) வில் வினவப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக முழுமையான ஓர் அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

856/ '16

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில், அக்குரஸ்ஸ, கொடபிட்டிய தேசிய பாடசாலைக்கு 2016 ஆம் ஆண்டுக்காக 6ஆம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிக்கின்ற போது முறைகேடு இடம்பெற்றுள்ளது என்பதையும்;

(ii) இதன் காரணமாக சில மாணவர்களுக்கு அநீதி நேர்ந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2016 ஆம் ஆண்டுக்காக, கொடபிட்டிய தேசிய பாடசாலையின் 6ஆம் தரத்துக்கு ஏனைய பாடசாலைகளிலிருந்து அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி மாணவர்கள் அனுமதிக்கப்பட்ட முறையியல், ஒவ்வொரு மாணவருக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பற்றிய ஒரு பட்டியல் அதிபரினால் கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், குறித்த பட்டியலுக்கு அமைச்சின் விதப்புரை கிடைக்கப் பெற்றுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இது தொடர்பில் விசாரணையொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், குறித்த திகதி யாது என்பதையும்;

(iii) அநீதி இழைக்கப்பட்ட மாணவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1172/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளின் அளவு யாது;

(ii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவின் குடியிருப்பாளர்கள் அரசாங்க காணிகளை அளிப்பு/ உரிமப்பத்திரங்கள் வாயிலாக பெற்றுக்கொள்ள விண்ணப்பித்துள்ளார்களா;

(iii) ஆமெனில், அக்கோரிக்கைகளின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி விண்ணப்பதாரிகளுக்கு இற்றைவரை அளிப்பு / உரிமப்பத்திரங்கள் வாயிலாக வழங்கப்படுள்ள காணிகளின் அளவு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1213/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) L.T.T.E. பயங்கரவாதிகளினால் 1983 ஆம் ஆண்டின் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் கொலை செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) இவ்வெண்ணிக்கை, ஒவ்வோர் இனத்தின் படி வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவ்வாறு கொலை செய்யப்பட்ட,

(i) ஒவ்வோர் அரசியல் கட்சியினது தலைவர்கள் அல்லது உறுப்பினர்களின் எண்ணிக்கை;

(ii) ஒவ்வொரு மதத்துக்குரிய மதத் தலைவர்கள் அல்லது மதத்தைச் சேர்ந்த மக்களின் எண்ணிக்கை;

(iii) அரச அலுவலர்களின் எண்ணிக்கை;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேலே (அ) மற்றும் (ஆ) வில் வினவப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக முழுமையான ஓர் அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும் மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1465/ '16

கௌரவ விமலவீர திசாநாயக்க,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்டபதற்கு,— (1)

(அ) (i) ஓய்வுபெற்ற சனாதிபதிகளின் பாதுகாப்பு சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பிரயாணச் செலவு மற்றும் அடிப்படைச் சம்பளத்தில் 1/3 விசேட கொடுப்பனவு மாதாந்தம் செலுத்தப்படுகின்றதா;

(ii) ஆமெனில், ஓய்வுபெற்ற சனாதிபதியான கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு, குறிப்பிட்ட கொடுப்பனவுகள் 2016 மே மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளமைக்கான காரணம் யாது;

(iii) சமமான சேவைக்கு சமனான உரிமைகள் கிடைக்கப்பெறாத மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு குறிப்பிட்ட கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2017 மார்ச்சு 10, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

858/'16

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வன நிலப்பரப்பின் அளவினை அதிகரிக்கச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வனங்கள் யாவையென்பதையும்;

(iii) அதிகரிப்பதற்கு உத்தேசமாயுள்ள ஹெக்டயார் அளவு ஒவ்வொரு வனத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) புதிய வனச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான பிரதேசங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அப்பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(iv) புதிய வனச் செய்கை மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் ஹெக்டயார் அளவு ஒவ்வொரு பிரதேசத்திற்கு ஏற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1214/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) L.T.T.E. பயங்கரவாதிகளினால் 1983 ஆம் ஆண்டின் பின்னர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொலை செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) இவ்வெண்ணிக்கை, ஒவ்வோர் இனத்தின் படி வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவ்வாறு கொலை செய்யப்பட்ட,

(i) ஒவ்வோர் அரசியல் கட்சியினது தலைவர்கள் அல்லது உறுப்பினர்களின் எண்ணிக்கை;

(ii) ஒவ்வொரு மதத்துக்குரிய மதத் தலைவர்கள் அல்லது மதத்தைச் சேர்ந்த மக்களின் எண்ணிக்கை;

(iii) அரச அலுவலர்களின் எண்ணிக்கை;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேலே (அ) மற்றும் (ஆ) வில் வினவப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக முழுமையான ஓர் அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும் மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

860/ '16

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள்அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை இராணுவத்தின் 06 ஆம் பீரங்கிப் படையணியில் 65954 ஆம் இலக்கத்தின் கீழ் பணியாற்றும் திக் எல்ல லேகம்கே சமித் அஞ்சுல குமார லேகம்கே எனும் உத்தியோகத்தர் இராணுவ ஒழுக்க விதிகளை மீறியுள்ளார் என்பதையும்;

(ii) இவர் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(iii) இதன் காரணமாக பாதிக்கப்பட்ட இவரது மனைவியான ஸ்ரீமாலி லசந்திகா நவரத்ன என்பவருக்கு அநீதி ஏற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி உத்தியோகத்தர் சம்பந்தமாக விசாரணையொன்று நடத்தப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எப்போதிருந்து என்பதையும்;

(iii) ஸ்ரீ மாலி லசந்திகா நவரத்ன என்பவருக்கு ஏற்பட்டுள்ள அநீதி தொடர்பாக அவருக்கு நிவாரணம் பெற்றுக்கொடுப்பதற்கு இராணுவம் தலையிடுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1235/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தினுள் 1983 ஆம் ஆண்டளவில் இருந்த மொத்த வீதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் தார் இடப்பட்டிருந்த வீதிகளின் எண்ணிக்கை மற்றும் கி.மீ. அளவு எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டு தொடக்கம் யுத்தம் முடிவடையும் வரை இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக அப்போதிருந்த அரசாங்கங்களினால் செலவு செய்யப்பட்ட நிதித் தொகை ஒவ்வோர் ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தம் முடிவடைந்த பின்னர் இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டிலும் ஒதுக்கப்பட்ட நிதித் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) இது தொடர்பான முழுமையான அறிக்கையை இச்சபையில் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?